# தைத் திருநாள்

**முன்னுரை** :-

**"தமிழர் போற்றும் நன்னாள்**

**உழவர் போற்றும் பொன்னாள்"**

என்று சிறப்பிக்கப்படும் தைத்திருநாள், சமயங்கள் கடந்து கொண்டாடப்படும் தமிழர்திருநாளாகும். இத்தகைய சிறப்பினை பெற்ற, தைப்பொங்கல் திருநாளின் சிறப்பினை இனி காண்போம்.

**பொங்கல்** :-

பொங்கல் என்பதற்கு, "பொங்கி வழிதல்" என்று பொருள். பொங்கல் திருநாள் அன்று, புதிய பானையில், புது அரிசியிட்டு, இருபுறமும் கரும்பு கட்டி, பொங்கல் வைப்பர். பொங்கல் பானையில் பொங்கல் வைக்கும் போது, அரிசியில் இருந்து, பால் பொங்கி வரும். பால் பொங்கி வருவது போல, தைத்திருநாளான தமிழ்ப் புத்தாண்டு முழுவதும் மக்கள் அனைவரும் வாழ்வுடனும், வளமுடனும் சிறப்பாக வாழ வேண்டும் என்று உரைப்பதே பொங்கல் திருநாளாகும்.

**பொங்கல் பண்டிகை** :-

பொங்கல் பண்டிகை, நான்கு நாட்களாகக் கொண்டாடப்படும் பண்டிகையாகும். அவை :-

1. போகிப் பண்டிகை.
2. தைப்பொங்கல்.
3. மாட்டுப்பொங்கல்.
4. காணும் பொங்கல்.



**போகிப் பண்டிகை** :-

போகிப் பண்டிகை, மார்கழித் திங்கள் இறுதி நாளில் கொண்டாடப்படும் பண்டிகையாகும். போகிப் பண்டிகை அன்று, வீட்டினை தூய்மை செய்து, புது வர்ணம் பூசி அழகு படுத்துவர்.

**பொங்கலோ பொங்கல்** :-

உழவர்கள் ஆடி மாதத்தில் விதை விதைத்து, மார்கழி மாத இறுதியில், நெற்கதிர்களை அறுவடை செய்து, தை முதல் நாளன்று வீடு வந்து சேர்க்கும் திருநாளே பொங்கல் திருநாளாகும். இந்நாளில், உழவர்கள் தம் உழைப்பிற்கேற்ற பயனை அடைவர். தைத்திருநாள் அன்று, உழவர்கள் தன் உழைப்பிற்கு உறுதுணையாக இருந்த நிலம், நீர், காற்று, சூரியன் போன்ற இயற்கை சக்திகளுக்கும், கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் சிறந்த நாளாகும்.

**"தை பிறந்தால் வழி பிறக்கும்"**

என்ற பழமொழிக்கேற்ப, உழவர்களுக்கு நல்ல விளைச்சலை கொடுத்த, தைத்திருநாளை சிறப்புடனும், மகிழ்வுடனும் கொண்டாடுவோம்.

**பொங்கல் வைக்கும் முறை** :-

தைப்பொங்கல் அன்று, அதிகாலையில் வீட்டின் முன் வாசலில் வண்ணக் கோலமிடுவர். சூரியன் இருக்கும் திசையை நோக்கி, புதிய அடுப்பு வைப்பர். வீட்டின் முன் வாசலில் இருபுறமும் கரும்பு கட்டி, நடுவில் புதிய பானையில் மஞ்சள் கட்டி, புது அரிசியிடுவர். பொங்கல் பால் பொங்கி வரும் போது, வீட்டில் உள்ளோர் அனைவரும் "பொங்கலோ பொங்கல்" என்று குலவையிடுவர். பொங்கல் பால் பொங்கி வருவது போல, வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும் என்பதனை, பொங்கல் உணர்த்துகிறது. பொங்கலை முதலில் சூரியனுக்கு படைப்பர். பின், வீட்டில் உள்ளோர் பொங்கல் மற்றும் தித்திப்பான கரும்பினை உண்டு மகிழ்வர். பொங்கல் அன்று, வீட்டின் வாசலில் மஞ்சள், வேப்பிலை, கண்ணுப்புல்லுச்செடி போன்றவற்றை இணைத்துக் கட்டுவர் இதனை "காப்பு கட்டுதல்" என்று அழைப்பர்.

**மாட்டுப்பொங்கல்** :-

தைப்பொங்கலுக்கு, மறுநாள் கொண்டாடப்படும் பண்டிகையே மாட்டுப்பொங்கல். மனிதர்களின் வாழ்வில் பெரும்பங்கு வகிப்பது, கால்நடைகள் தான். உழவுக்கும், தொழிலுக்கும் பயன்படும் கால்நடைகளுக்கு, நன்றி தெரிவிக்கும் திருநாளே மாட்டுப்பொங்கல்.

**கொண்டாடும் முறை** :-

உழவுக்கு பயன்படும் மாடுகளுக்கும், பசுக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் பண்டிகையே மாட்டுப்பொங்கல்.
மாட்டுப்பொங்கல் அன்று, மாடுகளின் இருப்பிடமான, தொழுவத்தை சுத்தம் செய்வர். மாடுகளை குளிப்பாட்டுவர். மாடுகளின் கொம்புகளுக்கு, வர்ணம் பூசுவர். மாட்டின் கழுத்தில், சலங்கை கட்டுவர். மாட்டுப்பொங்கல் அன்று தான், மாடுகளுக்கு புதிதாக மூக்கணாங்கயிறு, தாம்புகயிறு அணிவர். மாட்டுப் பொங்கல் அன்று, மாட்டுத்தொழுவத்தில் பொங்கலிடுவர். உழவுக் கருவிகளை சுத்தம் செய்து, சந்தனம், குங்குமம் பூசுவர். மாடுகளுக்கு பொங்கல், தேங்காய், பழம் கொடுப்பர். மாட்டுப் பொங்கல் அன்று, மாலை ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறும்.

**காணும் பொங்கல்** :-

காணும் பொங்கல் அன்று, மக்கள் அனைவரும் தனது குடும்பத்தினருடன், உறவினர், மற்றும் நண்பர்கள் இல்லத்திற்கு சென்று மகிழ்ச்சியுடன் பொங்கலைக் கொண்டாடுவர். இந்நாளில், தங்களுக்கு பிடித்த இடங்களுக்கு சுற்றுலா செல்வர். கிராமங்களில் வாழும் மக்கள், தங்களது வயல்வெளியில் பொங்கல் வைத்து கொண்டாடுவர்.

**முடிவுரை** :-

**"உழவுக்கும் தொழிலுக்கும்**
**வந்தனை செய்வோம்"**

-என்ற பாரதி வாக்கு மெய்ப்படும் வகையில், பொங்கல் திருநாள் கொண்டாடப்பட வேண்டும். பொங்கல் திருநாள் அன்று, உண்ணும் சர்க்கரைப் பொங்கலை போல், நம் வாழ்வும் இனிமையாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. உழவன் இயற்கைக்கும், நாம் உழவனுக்கும், நன்றி தெரிவிக்கும் திருநாளே தைத்திருநாள்.